1990 மே 9]

10-55 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகள் வழங்கு வதிலே பிரச்சினை இல்லை. ஆனால் லாரிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதிலே தான் பிரச்சினை. சென்னை நகரத்திலே இருக்கிற தண்ணீரை அங்கே பகிர்ந்து கொள்ளவேண்டிய சூழ் நிலை ஏற்படுகிறது. ஆகவே, அங்கேயிருக்கிற தண்ணீரினுடைய தேவையைக் கருதி, அங்கேயிருக்கிற அதிகாரிகளோடு பேசினேன். மறுநாளும் அங்கேயிருக்கிற துணைத் தலைவரையும் அழைத்து எல்லா அதிகாரிகளையும் வைத்து, செயலகத்திலே மறுநாளே 4 மணி நேரம் அதற்கான விவாதம் நடைபெற்றது. 25 ஆயிரம் லிட்டர் ஒரு நாளைக்கு அங்கே குடிநீர் கொடுப்பதற்காக 5 லாரி கள் மூலமாக அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் இப்போது சென்னையில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இல்லா மல், குடிநீர் அதிகமாகக் கிடைக்குமானால், அதைப்பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய, ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)

(அ) பொது விற்பனை வரி மூன்றாம் திருத்த சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.